## நிரப்பப்படாத திருவோடு

"உங்கள் இறைவனிடம் மன்னிப்புக் கோருங்கள். ஐயமின்றி அவன் பெரிதும் மன்னிப்பவனாக இருக்கின்றான். அவன் உங்கள் மீது வானத்திலிருந்து நிறைய மழையைப் பொழியச்செய்வான். செல்வத்தையும் சந்ததிகளையும் உங்களுக்கு வழங்குவான். உங்களுக் காகத் தோட்டங்களை உருவாக்குவான். உங்களுக்காக ஆறுகளையும் ஓடச் செய்வான். (71:10-12)

இன்றைய தினம் ஏழைகள் எவரையும் கையேந்த வைத்து விடாதீர்கள்
-நபிமொழி

படைப்பினங்களை உருவாக்கிய இறைவன் சந்தடி நிறைந்த மனித வாழ்க்கையிலிருந்து முற்றிலும் ஒதுங்கிக் கொண்டு தானியங்கி இயந்திரத்தின் மூலம் இவ்வுலகை இயங்கச் செய்துவிட்டு இனி எந்த விவகாரத்திலும் மூக்கை நுழைப்பதில்லை என்று கூறிவிட்டு கண்ணுக்கெட்டாத உயரத்தில் உட்கார்ந்து விடவில்லை.மாறாக அவன் ஒவ்வொரு விநாடியும் இப்பேரண்டத் தையும் அதன் ஒவ்வொரு அசைவையும் உற்று நோக்கிய வண்ணமே

இருக்கின்றான் என்பது மாத்திரமல்ல. யானை முதல் எறும்பு வரையிலான அனைத்து உயிரினங்களின் தேவைகளையும் நிறைவு செய்வதோடு துன்பக்கடலில் சிக்கிக் கொண்டவர்களின் அபயக்குரலையும் செவியேற்கிறான். என் அடியார்களே! என்னை எப்போது அழைத்தாலும் உங்கள் அழைப்பைச் செவிமடுக்கும் வகையில் நான் உங்களின் பிடரி நரம்பை விட மிக அருகாமையில் உள்ளேன், என்றும் பறைசாற்றுகின்றான்.

வருடத்தில் துல்ஹஜ் மாதம் ஒன்பதாம் நாள், மாதத்தில் ரமளானில் நோன்பு துறக்கும் பொழுது, வாரத்தில் வெள்ளிக்கிழமை அன்று ஒரு குறிப்பிட்ட நேரம், நாளில் ஒவ்வொரு இரவின் பின்னேரம் இப்படி பிரார்த்தனைகள் ஏற்கப்படும் பொழுதுகள் பற்றிய வழிகாட்டுதலும் நபிமொழி நூற்களில் காணக்கிடைக்கின்றன.

பாங்குக்கும் இகாமத்திற்கும் இடைப்பட்ட நேரம், தொழுகைக்குப் பின்பு கேட்கப்படும் பிரார்த்தனைகளும் இறைவனால் அங்கீகரிக்கப்படும் என்ற குறிப்புகளும் உண்டு.

மேற்குறிப்பிடப்பட்ட நேரங்களில்தாம் என்னைக் கேட்க வேண்டும் என்ற எந்தக் கட்டுப்பாடும் இல்லை. எந்த நேரத்திலும் எவ்விதச் சூழலிலும் எதைக் கேட்டாலும் அதைத் தரத் தயாராகவே உள்ளேன் என்று சொல்லத்தக்க வகையில் எனது கை விரிந்துள்ளது. என்னிடம் ஏந்திய கரங்கள் வெறுமனே திருப்பியனுப்பப்படுவதை வெட்க குறியீடாகக் கருதுபவன் நான் (அபூதாவுது,திர்மிதி) பிரார்த்தனையை விட மதிக்கத்தக்க ஒன்று வேறெதுவும் என்னிடம் இல்லை. (திர்மிதி) என்று இறைவன் கூறுகின்றான் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

இப்படியான பிரார்தனையின் வலியுறுத்தல்களை மனதில் கொண்டு அதனால் உந்தப்பட்டு நோயில் வாடுவோர், பசியில் பரிதவிப்போர் கடலில் மூழ்கியோர், மழையின்றித் தவிப்போர் என இவ்வுலகில் உள்ள லட்சோப லட்சம் மக்களின் கரங்கள் விண்ணோக்கி உயருகின்றன. ஆனால் அவை நிரப்பப்படாத திருவோடுகளாகவே மண்நோக்கித் திரும்பி வருகின்றன.

பத்ரில் ஏந்திய கைகளுக்கு உறுதுணையாக வானவர்களை அனுப்பி வைத்து வெற்றிக்கனியைத் தந்து சந்தோஷிக்கச் செய்த இறைவன் குஜராத், ஈராக், ஃபலஸ்தீன், ஆப்கானிஸ்தான் இன்னும் பல்வேறு இடங்களில் ஏந்திய கைகளை ஏன் அலட்சியப்படுத்தி விட்டேத்தியாக விட்டுவிட்டான். பைத்துல் முகத்தஸில் மர்யம்(அலை) அவர்களுக்கு சீஸனே இல்லாதபோது கனிவர்க்கங்களை வழங்கி பசியாற வைத்த இறைவன் சீஸன் நேரத்திலும் போதுமான அளவில் அவனது அருள் மழையை இன்று இறக்காமல் இருப்பது ஏன்?

கோளாறு இறைவாக்கிலா..? அல்லது நம் பிரார்த்தனைகளிலா? இறைவாக்கு என்றைக்கும் பொய்த்ததில்லை. நம் பிரார்த்தனைகளில் அதன் முறைப்பாடுகளில்தான் கோளாறு. இதுதான் உண்மை. போலீஸில் ஒரு கம்ப்ளைண்ட் கொடுத்தால் நடந்த நிகழ்வு நம் முகவரி எதிரியின் முகவரி சாட்சிகள் தடயங்கள் எல்லாம் அதில் சரியாகப் பதியப்பட வேண்டும். அப்போதுதான் அது விசாரணைக்கு வரும்.

தபால் மூலம் ஒரு செய்தியை ஒருவனுக்கு அனுப்பினால் அதற்கும் சில வழிமுறைகள் உண்டு. From, அட்ரஸ் எழுதிவிட்டு To.அட்ரஸ் எழுதாவிட்டால், அட்ரஸை முறையாக எழுதிவிட்டு ஸ்டாம்ப் ஒட்டவில்லையென்றால்.. எல்லாம் பண்ணிவிட்டு அதை போஸ்ட் பாக்ஸில் போடாமல் தர்ஹா உண்டியலில் போட்டால் தகவல் போய்ச் சேருமா என்ன...?

இந்தக்கதையில்தான் நமது பிரார்த்தனைகளின் லட்சணம் அமைந்துள்ளது. பிரார்த்தனையுடனும் நல்லெண்ணத்துடனும் துவங்கப்படும் எந்தவொரு முயற்சியும் வீண் போவதில்லை. எனவே உங்களது காலையின் திறவுகோலும்

மாலையின் தாழ்ப்பாழும் பிரார்த்தனையாக அமையட்டும் என்று அண்ணல் காந்தி அடிகள் கூறுவார். இருந்தும் இறைவாசல் திறக்கப்படாமல் இருக்கிறதென்றால் என்ன பொருள்?

நமது பிரார்த்தனைகள் முறைப்படி அமையப் பெறவில்லை என்பதுதான் எதார்த்தம். அந்த முறை என்ன என்பதை அடுத்துப் பார்ப்போம்.

**உதவி இறைவனிடமே:** இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லையென்று சொல்வதில்லை என்ற பாடலை அறியாதவர் எவருமில்லை. அந்த வகையில் நமது பிரார்த்தனைகள் இறைவனை நோக்கியே அமையவேண்டும். வாட்ச் ரிப்பேர் என்றால் என்ன செய்வோம்...? அது சம்பந்தப்பட்ட அறிவுடையோரிடம் சென்று கொடுத்துத் தான் அதைச் சரிசெய்வோம் இல்லையா..? ரிப்பேரான வாட்ச்சை நன்றாக வெளுத்துச் சுத்தம் செய்வான் என்று நினைத்து அதை வண்ணானிடம் கொடுத்தால் என்னவாகும்? இதைப்போல நமக்குத் துன்பம் என்றால் இறைவனிடம்தான் முறையிடவேண்டும். அவ்வாறின்றி போலிச் சாமியார் களிடம் போலி மதகுருக்களிடம் சென்றால் நம்பணம்தான் விரயமாகும்.

உன்னையே நாங்கள் வணங்குகிறோம், உன்னிடமே உதவி தேடுகிறோம், எனத் தொழுகையில் உறுதிமொழி எடுத்து விட்டு வெளியே வந்தபின் பார்ப்பவர்களிடமெல்லாம் நம் கைகளை ஏந்தினால் எப்படி? செருப்பின் வார் அறுந்தாலும் அதையும் என்னிடம் கேள் தருகிறேன் என்று இறைவன் கூறுகின்றான். உலகம் அழியும் வரை என்னை விட்டு வை என்று கேட்ட இப்லீஸின் பிரார்த்தனையையே அங்கீகரித் தவன் அல்லவா அவன். நம் பிரார்த்தனையை ஏற்க மாட்டானா என்ன? எண்பது வயதுக்குப்பின் குழந்தை பாக்கியம் சாத்தியமா.? மனிதனுக்குச் சாத்தியப்படாது. ஆனால் அது இறைவனுக்குச் சாத்தியமற்ற விஷயமல்ல என்ற நம்பிக்கையோடு இறைவனைப் பிரார்த்தித்து இஸ்மாயீல் (அலை) என்ற மகவைப் பெற்றார்கள் இறைத்தூதர் இப்றாஹீம் (அலை) அவர்கள் என்பது வரலாறு.

அபுத்தர்தா என்ற நபித்தோழர். அவரிடம் உனது வீட்டில் நெருப்பு பற்றிவிட்டது என்று சொல்லப்படுகிறது. எவ்வித சலனத்திற்கும் உள்ளாகாமல் நிச்சயம் அதற்கு வாய்ப்பில்லை எனத் திடனோடு கூறுகிறார் அபுத்தர்தா (ரளி). எந்தத் தைரியத்தில் கூறுகின்றீர்கள்? எனக் கேட்கப்பட்டது. காலையில் பஜ்ருத் தொழுகைக்குப் பின் இந்த துஆவை ஓதினால் அன்று முழுவதும் அவரது வீடு நெருப்பிலிருந்து காப்பாற்றப்படும். என்று நபி(ஸல்) அவர்களின் மூலம் கற்றுக்கொண்ட ஒரு துஆவை இப்போதுதான் ஓதிவிட்டு உட்கார்ந்துள்ளேன். பின் எப்படி என் வீடு நெருப்புக்கு இரையாகிடமுடியும்? இரையானால் நபிகளாரின் கூற்று பொய்யாகிவிடுமே என்று கூறினார்களாம். அதுபோலவே அவர்களின் வீட்டுக்கு ஆபத்து ஏற்படவில்லை. அவர்களின் பக்கத்து வீடு எரிந்து போயிருந்தது. செய்தி சொன்னவர் தவறுதலாகச் சொல்லிவிட்டார்.

பிரார்த்தனையில் இதுபோன்ற நம்பிக்கை அவசியம். அல்லாஹ் கோயிலுக்குப் போனால் சுகம் கிடைக்கும் என்ற மாற்று மதத்தவரின் உள்ளார்ந்த நம்பிக்கைதான் ஒவ்வொரு பள்ளிவாசலின் காலை மாலைத் தொழுகைக்குப்பின் வரிசையாய் நிற்கும் அந்தக்காட்சி.

**உள்ளமும் நாவும் ஒன்றுபட்டு...** முல்லா நஸ்ருத்தீன் ஒரு முறை டீ குடிக்க கடைக்குச் சென்றார். டீ போட்டவன் சீனி போட மறந்துவிட்டான். டீயைக் குடித்துவிட்டு டீ போட்டவனிடம் கொஞ்சம் சீனியைக் கேட்டு வாங்கித் தன் வாயில் போட்டுக் கொண்ட முல்லா கொஞ்ச நேரத்தில் கீழே விழுந்து புரள ஆரம்பித்துவிட்டார். அரண்டுபோன கடைக்காரன் ஒருவேளை பாலில் பல்லி விழுந்து அதனால் விஷம் ஏறி மயக்கமுற்று விழுந்துவிட்டாரோ... போலீஸ்

வந்தால் மாட்டிக்கொள்வோமே என்ற பயத்தில் இருந்த பாலையெல்லாம் அவசரமாய் எடுத்துக் கீழே கொட்டி விட்டான்.

கொஞ்ச நேரத்திற்குப் பின் முல்லா எழுந்து உட்கார்ந்தார். அவரை ஆசுவாசப்படுத்திவிட்டு என்ன ஏது என்று விசாரித்தான் கடைக்காரன். வேறொன்றுமில்ல. முதல்ல டீயில சீனி போட மறந்துட்டீங்கள்ல. அப்புறம் கொஞ்சம் சீனி வாங்கி வாயில் போட்டேன். அதுபோயி டீயோட கலக்கணும்ல. அதான் கீழே விழுந்து புரண்டேன் என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டு நடையைக் கட்டினார் முல்லா. பாலைக்கொட்டிய கடைக்காரனுக்கு எப்படி இருந்திருக்கும் என்று சொல்ல வேண்டுமா என்ன? சீனியும் தேயிலையும் இணைந்தால் டீ சுவையாக இருக்கும். அதுபோல பிரார்த்திக்கும் போது நமது உள்ளமும் நாவும் ஒன்றுபட்டிருக்க வேண்டும்.

என் சொற்கள் உயரப் பறக்கின்றன. ஆனால் என் எண்ணங் களோ அடிமட்டத்தில் நிற்கின்றன. எண்ணங்கள் இல்லாத சொற்கள் விண்ணுலகை எட்டுவதில்லை என்று வில்லியம் ஷேக்ஸ்பியர் கூறுவார். பூஜையும் பிரார்த் தனையும் உதட்டால் செய்யப்படுபவவை அல்ல. அவை இதயத்தால் செய்யப்பட வேண்டியவை என்று காந்தியடிகள் கூறுவார். உள்ளம் இணையாமல் நாவுமட்டும் செய்யும் தோத்திரம் வெற்று ஒலி எழுப்பும் தாளம். நாவின்றி உள்ளம் மட்டும் செய்யும் தோத்திரம் இனிமையான ஆனால் மென்மையான (ஊமை) இசை. இரண்டும் இணையும் போதுதான் மண்ணுலகையும் விண்ணுலகையும் நிறைந்து மகிழ்விக்கும் பன்னிசை பிறக்கும் என்று மேலைநாட்டு அறிஞன் கூறுவான்.

அலட்சிய மனோபாவத்துடனும் அக்கறையின்மையுடனும் கூடிய பிரார்த்தனை இறைவனால் அங்கீகரிக்கப்படுவதில்லை என்பது ஆதாரப்பூர்வமான நபிமொழி.

பாவத்திலிருந்து விலகி நின்று... ஒவ்வொரு தொழுகைக் குப் பின்பும் ஸலாம் கொடுத்தவுடன் பையிலிருந்து ஏதோவொன்றை உருவி எதையோ சொல்லி அதில் ஊதி திரும்பவும் பையில் பத்திரமாய் வைத்துக் கொண்டிருந்தான் ஓர் ஆசாமி. இதைப் பலநாட்கள் கவனித்துக் கொண்டிருந்த ஆலிம்சா அவனிடம் என்ன விஷயம் என்று கேட்க, ஒண்ணுமில்ல என்று சொல்லி மழுப்பி விட்டான். ஒருநாள் அவனுக்குத் தெரியாமல் பின்னால் நின்று கவனிக்க, கடைசியில் என்னடாவென்று பார்த்தால் லாட்டரிச் சீட்டை பையிலிருந்து உருவி அதுல ஓதி ஊதி தனக்கே பம்பர் பரிசு விழனும்னு வேண்டிக்கிட்டு இருந்திருக்கான்.

இப்படி லாட்டரிக்கடை ஒயின்ஷாப் சினிமா தியேட்டர் திறப்பு விழா இவற்றிற்கெல்லாம் ஆலிம்சாவை அழைத்து பிரார்த்தனை பண்ணக்கூடாது. அதே போல பாவம் புரிந்து கொண்டு இறைவனிடம் வேண்டினாலும்அதற்குப் பலன் கிடைப்பது குதிரைக் கொம்புதான்.

மூஸா (அலை) அவர்களின் காலத்தில் மழையின்றி பஞ்சத்தால் மக்கள் வாட, இறைவனைப் பலமுறை பிரார்த்தித்தும் மழை பொழியாததைக் கண்டு வருத்தமுற்ற நபியவர்கள் இறைவனிடம் காரணம் கேட்ட போது உன்னோடு பிரார்த்த னையில் ஈடுபட்ட அந்தக் கூட்டத்தில் புறம் பேசுபவன் ஒருவன் இருந்தான். அதனால் அதை நான் அங்கீகரிக்கவில்லை என்று கூறுகின்றான். யார் அவன் என்று இறைவனிடம் மூஸா(அலை) கேட்க, புறம் பேசுவதை விலக்கியுள்ள என்னையே புறம் பேசப் பணிக்கிறாயா? என்று மறுத்துரைக்க தம் கூட்டத்தாரை நோக்கி குறிப்பிட்ட அந்த மனிதர் இறைவ னிடம் பாவ மன்னிப்புப் கோரட்டும் என்று கட்டளையிட, அதுபோல அவர் தவ்பா கேட்க, உடனே மழை பொழிந்தது.

நீண்டதூரம் கடந்து புனிதப் பயணம் மேற்கொண்டு புழுதி படிந்த தலையுடன் ஒருவன் வானத்தின் பக்கம் தன் கைகளை உயர்த்தி என் இறைவனே என்று அழைக்கின்றான். ஆனால் அவனது உணவு பானம் உடல் உடை அனைத்தும் பாவமான

வழியில் வந்திருக்கின்றன. இப்படியான இறைவரம்பை மீறிய இந்த மனிதனின் பிரார்த்தனை எப்படி இறைவனால் அங்கீகரிக்கப்படும்? என்று கேட்கிறார்கள் நபி(ஸல்) அவர்கள். கேட்பது நம் கடமை கொடுப்பது இறை உரிமை மேற் கண்ட ஷரத்துக்களையெல்லாம் முழுமையாக பேணி பிரார்த்தித்த பின்பும் நம் பிரார்த்தனைகள் ஒப்புக் கொள்ளப்படவில்லையா? கவலை வேண்டாம். காரணம் நாம் ஒன்றை வெறுப்போம். ஆனால் இறை பார்வையில் அதுவே நமக்கு நன்மை தரத்தக்கதாக இருக்கும். நாம் ஒன்றை ஆசிப்போம். ஆனால் இறைப்பார்வையில் அது நமக்கு தீமை தரத்தக்கதாக இருக்கும். நமது பிரார்த் தனைக்கான பிரதிபலன் இம்மையில் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை மறுமையில் அதைவிடச் சிறந்தது கிடைக்கும் என்று நம்பவேண்டும்.

நபி மொழிச் செய்தி ஒன்று: பாவத்திற்குத் துணை போதல், இரத்தபந்தத்தை முறிக்க உதவுதல் இவை அன்றி ஒரு மனிதன் கேட்கும் எந்தப் பிரார்த்தனையையும் இறைவன் மறுப்பதில்லை. பின்வரும் மூன்றில் ஒன்றை அவனுக்கு இறைவன் வழங்குவான்.

கேட்டதை இம்மையிலேயே கொடுத்துவிடுவான்.அதற்கு ஈடாக ஒரு தீங்கிலிருந்து அவனைக் காப்பாற்றுவான். மறுமையில் அதைவிடச் சிறப்பானதை வழங்கி கவுரவிப் பான். (ஹாகிம்) மறுமையில் ஒரு மனிதனிடம் இறைவன் உனது பிரார்த்தனைகளில் சிலவற்றுக்கு உலகிலேயே பதிலளித்தேன். சில பிரார்த்தனைகளுக்கான பதிலை மறுமைக்கான கொடையாகச் சேமித்துவைத்தேன். இதோ அந்தக் கொடை என அவனிடம் வழங்குவான். அதன் செழுமையைக் கண்ட அந்த மனிதன், அந்தோ எனது எந்தப் பிரார்த்தனையும் உலகில் ஏற்கப்படாமல் இருந்திருக்கக் கூடாதா என்று ஏக்கம் கொள்வானாம். (ஹாகிம்) இதனால்தான் நபி(ஸல்) அவர்கள் ஒவ்வோர் இறைத் தூதருக்கும் அங்கீகரிக்கப்பட்ட சில பிரார்த்தனைகளை இறைவன் வழங்கியுள்ளான். அவற்றை உலகிலேயே அவர்கள் பயன்படுத்திவிட்டனர். ஆனால் எனக்கென்று வழங்கப்பட்ட அந்தப் பிரார்த்தனையை மறுமையில் என் சமுதாயப் பரிந்துரைக்காகப் பத்திரப்படுத்தி வைத்துள்ளேன் என்று கூறினார்கள்.

## இறுதியாக நம் மனப்பதிவுக்கான சில செய்திகள்:

இறைநேசர் இப்றாஹீம் (ரஹ்) அவர்களிடம் சிலர் வந்து மழை வேண்டி நாங்கள் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஆனால் ஒவ்வொரு தடவையும் வெறுங்கையுடன் திரும்புகின்றோம். என்ன காரணம் என்று வினவினர். அதற் கவர்கள் சொன்ன பதில் என்ன தெரியுமா?

- இறை நம்பிக்கையுண்டு உங்களிடம்; ஆனால் அதற்கேற்ற வழிபடுதல் இல்லை.
- இறைத்தூதர் மேல் அன்புண்டு உங்களுக்கு ஆனால் அவர்களின் நடைமுறை இல்லை உங்கள் வாழ்வில்.
- குர்ஆனை கிளிப்பிள்ளையாட்டம் ஓதுகின்றீர்கள். ஆனால் அதன்படி அமையவில்லை உங்கள் வாழ்வு.
- இறையருட்கொடைகளைக் குறைவின்றி அனுபவிக்கின்றீர் கள்; ஆனால் அதற்கான நன்றி இல்லை உங்களிடம்.
- இப்லீஸ் உங்கள் எதிரி என்கிறீர்கள்; ஆனால் அவனுக்கு மாறு செய்வதில்லை நீங்கள்.
- சுவனம் உண்டு என நம்புகின்றீர்கள்; ஆனால் உங்களிடம் அதை அடைவதற்கான முயற்சி இல்லை.
- நரகம் உண்டு என நம்புகின்றீர்கள்; ஆனால் அதிலிருந்து நீங்கள் தப்ப முயற்சிப்பதில்லை.
- மரணம் உண்டு என நம்புகின்றீர்கள் ஆனால் உங்களிடம் அதற்கான தயாரிப்பு இல்லை.
- இறந்தவர்களைப் புதைக்கின்றீர்கள் நீங்கள்; ஆனால் அதன் மூலம் பாடம் பெறுவதில்லை.
- பிறரின் குறைகளைத் துருவித்துருவி ஆராய்கின்றீர்கள். ஆனால் உங்கள் குறைகளைக் கண்டு கொள்வதே இல்லை.

இப்படி உங்கள் வாழ்வில் எல்லாம் இல்லை, இல்லை என்றாகிவிட்டதால் இறையருட் கொடையான மழையும் இல்லையென்றாகி விட்டது. என்றைக்கு இந்த இல்லைகள் இல்லாமல் போகின்றனவோ அன்று ஏந்தப்பட்ட திருவோடுகள் நிரம்பி வழியும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.